புதுச்சேரி காவல்துறை

# பாலின கூருணர்வு நிகழ்ச்சி



## அரசியல் அமைப்பு மற்றும் சட்டப்படியான வழிவகை

பாலினம் பற்றிய சமத்துவ குறிப்புகள் பற்றி நமது இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் தெளிவாக பிரதிபலிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசியலமைப்புச் சட்டம் பெண்களுக்கு சம உரிமை கொடுத்ததோடு நிறுத்தாமல் அவர்களுக்கு ஆக்கப்பூர்வமான அதிகாரம் வழங்கவும் வழிவகுத்துள்ளது. நமது குடியரசின் அமைப்பில் பெண்களை மேன்மைப்படுத்துவதை பல வகையிலும் குறிக்கோளாக அமைக்கப்பட்டுள்ளது.

**சட்டப்படியான வழிவகை**

பெண்களுக்கு சம உரிமை வழங்கவும் அவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள், வன்கொடுமைகள், ஏற்றத்தாழ்வுகளை ஒழித்துக்கட்ட அவர்களுக்கு தேவையான உத்திகளையும், சம உரிமைகளையும் வழங்க நமது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையில் ஒவ்வொரு மாநிலத்திலும் பெண்களுக்கு சம உரிமை வழங்கவும் அவர்கள் படும் இன்னல்களையும், கொடுமைகளையும் எதிர்நோக்க அவர்களுக்கென்று பல சட்டங்களை தனித்தன்மையுடன் உருவாக்கியுள்ளது.

பெண்கள் பல குற்றங்களால் பாதிக்கப்பட்டிருந்தாலும் பெண்களை மட்டுமே குறிவைக்கும் சில குற்றங்களை பெண்களுக்கெதிரான குற்றங்கள் என்று வடிவமைக்கப் பட்டுள்ளது. அவைகளை கீழ்க்கண்டவாறு இரண்டு வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளது:-

**இந்திய தண்டனை சட்டத்திற்கு கீழ்வரும் குற்றங்கள் :**

- கற்பழிப்பு (376 இபிகோ)
- கடத்தல் கவர்ந்து செல்லுதல் (363 - 373 இபிகோ).
- வரதட்சணைக் கொடுமை அதனால் மரணமடைதல் (302 / 304-B இபிகோ).
- தன்னாலோ அல்லது உடலாலோ கொடுமை அனுபவித்தல் (498-A இபிகோ).
- மானபங்க படுத்துதல் (354 இபிகோ).
- பெண்களை பலவித முறைகளில் கேலி செய்தல் (509 இபிகோ).
- சட்டத்திற்கு புறம்பான திருட்டு திருமணம் செய்தல் (496 இபிகோ).
- வாழ்நாளில் மனைவியிருக்கும்போதே மற்றொரு பெண்ணை திருமணம் செய்தல் (494 இபிகோ).
- பெண் குழந்தைகளை தவறான வழிகளில் வன்புணர்ச்சிக்கு ஈடுபடுத்துவது (அல்லது) கட்டாயப்படுத்துவது [366(A) இபிகோ].
- சட்டப்படி திருமணமான உணர்வை உருவாக்கி ஒரு பெண்ணிடம் தகாத உறவு கொள்ளுதல் (493 இபிகோ).
- பிறருடைய மனைவியுடன் சம்மதமின்றி உடலுறவு கொள்ளுதல் (497 இபிகோ).
- ஒரு பெண்ணின் சம்மதமின்றி கருக்கலைப்பு செய்தல் (312 - 313 இபிகோ).
- கருக்கலைப்பு செயலின் விளைவாக பெண்ணுக்கு மரணம் ஏற்படுத்துதல் (314 இபிகோ).

**சிறப்புச் சட்டங்களின்கீழ் வரும் குற்றங்கள் :**

பொதுவாக அனைத்து சட்டங்களும் பெண்களுக்கு என்று தனித்து சார்பு செய்யவில்லை என்றாலும், அவ்வப்போதைய தவிர்க்க முடியாத தேவைகளுக்கேற்ப அவர்களின் அவர்களது ஊக்கத்தை பாதுகாக்கும் வகையில் சில சிறப்புச் சட்டங்கள் இயற்றி அதில் தேவைப்படும் திருத்தங்களை அரசு செய்து வருகிறது. அவற்றில் சில-

➢ **பரத்தமைத் தொழில் சட்டம், 1956**

➢ **வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961**

➢ **பெண்களை இழிதகவாக எடுத்துரைத்தல் (தடுப்பு) சட்டம், 1986**

➢ **குடும்ப வன்கொடுமைச் சட்டம், 2005**

➢ **புதுச்சேரி காவல் (திருத்தல்) சட்டம், 34-BB**

➢ **தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000**

## இந்திய அரசின் பெண்களுக்கான சிறப்பு தொடக்க முயற்சி

I. **பெண்களுக்கான தேசிய ஆணையம் :** தேசிய மகளிர் ஆணையம் 1992-ல் ஜனவரி மாதத்தில் பெண்களுக்கெதிரான குற்றங்களைத் தடுப்பதற்காகவும், ஆய்வு செய்வதற்காகவும், கண்காணிப்பதற்காகவும் அவர்களுக்கான சட்டத் திருத்தங்கள் செய்வதற்கென நியமிக்கப்பட்டது.

II. **பெண் குழந்தைகளுக்கான தேசிய செயல்முறைத் திட்டம் (1991 – 2000) :** பெண் குழந்தைகளின் சிறப்பான எதிர்காலத்திற்காகவும், அவர்களை பாதுகாக்கவும் உருவாக்கப்பட்டது.

III. **பெண்களுக்கு அதிகாரம் வழங்கும் தேசியக் கொள்கை, 2001 :** தேசிய மனிதவள மேம்பாட்டுத் துறையின்கீழ் இயங்கும் "பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்றத்துறை இந்த தேசிய வடிவமைப்பை" 2001-ல் தயார் செய்தது. இதன் குறிக்கோள் பெண்கள் முன்னேற்றத்தையும், வளர்ச்சியையும் அவர்களுக்கு அதிகாரம் வழங்குதலையும் கொண்டதாகும்.

அமஅபு.—137/11—1,000 பிரதிகள் (225)—8-2-2013.